
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror
www.tamilmirror.lk

THURSDAY, AUGUST 17, 2023

வியாழக்கிழமை 17 ஒகஸ்ட், 2023 | ஒளி: 09 கதிர்: 064 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு | FREE



## வரட்சியால் 37 ஆயிரம் ஏக்கர் வயல் நாசம்

நாட்டில் தற்போது நிலவும் வரட்சி காரணமாக 37 ஆயிரத்து 101 ஏக்கர் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

ரேடார் திட்டத்தால் ரூ. 78 மில்லியன் நட்டம்

# சர்வதேச சக்திகளின் ஆடுகளமாக இலங்கை இருக்க முடியாது



சர்வதேச சக்திகளின் ஆடுகளமாக, இலங்கை இருக்க முடியாது என்றும் வெளிவிவகார கொள்கை முறையாக அமல்படுத்தப்பட வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நிரோஷன் பெரேரா தெரிவித்தார்.

சீனக் கப்பல் இலங்கைக்கு வருகை தந்த போது, விதிமுறையாக்கம் ஒன்றை ஏற்படுத்துவதாக அரசாங்கம் கூறியபோதும் அரசாங்கம் தயாரிக்கவில்லை என்று புலப்படுகிறது என்றும் சுட்டிக்காட்டினார்.

புதன்கிழமை (16) நடைபெற்ற ஊடக சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சீன ஆராய்ச்சி கப்பலொன்று ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருவதான செய்தியொன்று, தற்போது இந்திய ஊடகங்களிலும் சர்வதேச ஊடகங்களிலும் பரபரப்பாக பேசப்படுகிறது.

ருஹுனு பல்கலைக்கழகம் மற்றும் நாரா நிறுவனம் இணைந்தே இதற்கு அழைப்பு விடுத்துள்ளதாக அறியக் கிடைக்கிறது. இவ்வாறான ஆராய்ச்சி கப்பல் இலங்கைக்கு வருவது தொடர்பாக, விதிமுறையாக்கம் ஒன்றை ஏற்படுத்துவதாக இதே கப்பல் இதற்கு முன்னர் வந்து சர்ச்சையை ஏற்படுத்திய போது இலங்கை அரசாங்கம் கூறியது.

தொடர்ச்சி P2

எமது மக்களுக்கு தீர்வு காண

## கிடைக்கும் சந்தர்ப்பங்களை நாங்கள் தவற விடக்கூடாது

### புலிகளை உதாரணம் காட்டுகிறார் புத்திரசிகாமணி

எஸ். கே. குமார்



எமது மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களை நாம் தவற விட கூடாது என்று முன்னாள் பிரதியமைச்சர் வடிவேல் புத்திரசிகாமணி தெரிவித்தார்.

ஜனாதிபதியின் அழைப்பை தமிழ் முற்போக்கு கூட்டணியினர் விட்டுக்கொடுத்திருக்க கூடாது என்றும் விடுதலை புலிகளுக்கு கிடைத்த பல சந்தர்ப்பத்தை விட்டுக் கொடுத்ததால்த்தான், அந்த இயக்கத்தை அழிக்ககூடிய சந்தர்ப்பத்தை சிங்கள அரசுக்கு வழங்கினார்கள் என்று தான் நினைப்பதாகவும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

# மலைநீலியம்மன் கோவில் காணிகளை விடுவிக்கவும்

### வெருகல் மக்கள் கோரிக்கை

தொல்லியல் திணைக்களத்தால் கையகப்படுத்தப்பட்டு, பௌத்த விகாரை அமைக்கப்பட்டுவரும் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்லடி பகுதியில் அமைந்துள்ள மலைநீலியம்மன் கோவிலுக்குரிய காணிகளை விடுவிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

மலைநீலி அம்மன் கோவிலின் காணிகள் தொல்லியலுக்குரிய பகுதியாக அடையாளப்படுத்தப்பட்டு, கையகப்படுத்தப்பட்டிருந்த நிலையில், அது பௌத்தத்துக்குரிய பகுதியாக உரிமைகோரி, அப்பகுதியில் விகாரை அமைக்கப்பட்டு, பௌத்த மயமாக்கப்பட்டு வருகின்றது.



2006ஆம் ஆண்டு அப்பகுதியில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக, அப்பகுதி மக்கள் இடம்பெயர்ந்து மட்டக்களப்பு உட்பட பல்வேறு இடங்களில் தஞ்சமடைந்த போது, 1835ஆம் ஆண்டுக்கு முற்பட்ட பழைமையான வரலாற்றைக் கொண்ட மலைநீலி அம்மன் கோவிலானது விமானத் தாக்குதலினால் சேதமடைந்தது.

தொடர்ச்சி P2



மனித உடலின் உள் உறுப்புகள் 423 இன் பெயர்களை

## 4 நிமிடங்களில் கூறி சோழன் உலக சாதனை

எஸ்.சதீஸ்

மனித உடலின் உள் உறுப்புகள் 423 இன் பெயர்களை நான்கு நிமிடங்களில் கூறி, உலகின் அதிக ஞாபகத் திறன் கொண்டவராக, பொகவந்தலாவையைச் சேர்ந்த 8 வயது மாணவி கனிஷிகா சோழன் உலக சாதனை படைத்துள்ளார்.

தொடர்ச்சி P2

குருந்தூர் மலையில் நாளை பொங்கல்:

## உரிமைகளை வென்றெடுக்க அணிதிரளுமாறு அழைப்பு



சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனாருக்கு எதிர்வரும் 18ஆம் திகதி, பொங்கல் விழாவை மேற்கொள்ள உள்ளதாகவும் அனைத்து மக்களையும் அணிதிரண்டு வந்து பொங்கல் நிகழ்வில் கலந்து கொண்டு, எமது உரிமைகளை வென்றெடுக்க அணிதிரளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

வெளிநாடுகளில் உள்ள

## வைத்தியர்களின் விடுமுறை இரத்து செய்யப்படவில்லை



வெளிநாட்டுகளில் உள்ள வைத்திய அதிகாரிகள் மற்றும் நிபுணர்களின் விடுமுறைகளை இரத்து செய்யவதற்கான தீர்மானம் எடுக்கப்படவில்லை என்று சுகாதார அமைச்சின் செயலாளர் ஜானக ஸ்ரீ சந்திரகுப்த தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## குருந்தூர் மலை பொங்கலை குழப்ப முயல்கின்றனர்

### தமிழ் பேசும் மக்களுக்கு க.சிவநேசன் அழைப்பு




சண்முகம் தவசீலன்

பல நூறு கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இருந்து வந்து, குருந்தூர் மலை பொங்கலை குழப்புகின்ற முயற்சிகள் இடம்பெறுவதாகவும் பொங்கல் நிகழ்வை நடத்துவதற்கு உறுதுணையாக இருக்க, தமிழ்பேசும் மக்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்றும் முன்னாள் வடமாகாண சபை விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன்

தொடர்ச்சி P2

புதிய திட்டம் தயாராகும் வரை

## 6 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு கொடுப்பனவு வழங்க தீர்மானம்

### கொடுப்பனவை இராஜினாமா பாதிக்காது



சிறுநீரக நோயாளிகள், ஊனமுற்றோர் மற்றும் குறைந்த வருமானம் பெறும் முதியோர்கள் உள்ளடங்கலாக 6 இலட்சத்து 47 ஆயிரத்து 683 பேருக்கு புதிய திட்டம் தயாரிக்கப்படும் வரை கொடுப்பனவுகளை வழங்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



குவைத்தில் இருந்து

## நாடு கடத்தப்பட்ட 54 பேர் நாட்டை வந்தடைந்தனர்

செல்லுபடியாகும் விசா இன்றி, குவைத்தில் தங்கியிருந்த மேலும் 54 இலங்கையர்கள், அங்கிருந்து நாடு கடத்தப்பட்ட நிலையில், கட்டுநாயக்கா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக, புதன்கிழமை (16) நாட்டை வந்தடைந்தனர். ஓர் ஆண் மற்றும் 53 பெண்களே நாடுகடத்தப்பட்டுள்ளதுடன், அவர்களில் பெரும்பாலானோர் அநுராதபுரத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுடன், பொலன்னறுவை,

தொடர்ச்சி P2



அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபன

## தலைவராக அஜந்த மெண்டிஸ் நியமனம்

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் புதிய தலைவராக வைத்தியர் அஜித் மெண்டிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதம் சுகாதார அமைச்சரால் புதன்கிழமை (16) தமக்கு வழங்கப்பட்டதாக வைத்தியர் அஜித் மெண்டிஸ் தெரிவித்தார்.


தொடர்ச்சி P2

சென்னை விமான நிலையத்துக்குள்

## 7 அடுக்கு பாதுகாப்பை மீறி நுழைந்த யாழ். இளைஞன்

விமான பயணச்சீட்டு இல்லாமல், 7 அடுக்கு பாதுகாப்பையும் மீறி சென்னை விமான நிலையத்துக்குள் சென்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞரை, அதிகாரிகள் பிடித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சுதந்திர தினத்தை ஒட்டி, சென்னை விமான நிலையத்தில் உச்சக்கட்டமாக 7 அடுக்கு பாதுகாப்பு முறை அமலில் உள்ளது.



இளைஞர் ஒருவர், திங்கட்கிழமை (14) இரவு விமான டிக்கெட், சிறப்பு அனுமதி எதுவும் இல்லாமல், விமான நிலையத்தின் பாதுகாப்பு சோதனை, சுங்கச் சோதனை ஆகிய பகுதிகளைக் கடந்து, குடியுரிமை சோதனை நடக்கும் கருமபீடப் பகுதி வரை சென்று அங்கு சுற்றிக் கொண்டிருந்தார்.

தொடர்ச்சி P2

13ஆவது திருத்தம் குறித்த

## தேசிய காங்கிரஸின் முன்மொழிவு ஜனாதிபதி ரணிலிடம் கையளிப்பு

ஏயெஸ் மௌலானா



அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தம் தொடர்பான தேசிய காங்கிரஸின் முன்மொழிவுகள் அடங்கிய அறிக்கையை அதன் தலைவரும் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## சர்வதேச சக்திகளின் ஆடுகளமாக இலங்கை இருக்க முடியாது

ஆனாலும் தற்போது எழுந்துள்ள பிரச்சினையை நோக்கும் போதும் அவ்வாறான விதிமுறையாக்கம் ஒன்றை அரசாங்கம் தயாரிக்க வில்லை என்ற புலப்படுகிறது. சர்வதேச சக்திகளின் ஆடுகளமாக இலங்கை இருக்க முடியாது. வெளிவிவகார கொள்கை முறையாக அமல்படுத்தப்பட வேண்டும்" என்றார்

அஸ்வெசும வேலைத்திட்டம் முறையாக இடம்பெறுவதாக இல்லை என்பதை உலக வங்கியிடம் தெரிவிப்போம். அரசாங்கம் தனது நிலைப்பாடு மட்டும் சரி என்ற போக்கிலே செயற்படுகிறது.

மக்கள் பக்கம் இருந்தே எமது வெளிவிவகாரக் கொள்கை செயற்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

வெளிநாட்டு கடனை அடைப்பதில் மாத்திரமே தற்போதைய அரசாங்கம் கவனத்தை செலுத்தியுள்ளது என்றும் மக்களை நசுக்கும் கொள்கையை கைவிட்டு மக்கள் சார் ஆட்சிக் கொள்கையை முன்னெடுக்குமாறு கோருகிறோம் என்றும் குறிப்பிட்டார்.

ஏற்றுமதிகளை இலக்காக் கொண்டு சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாண்மைகளை பலப்படுத்தி மக்களை வாழ வைக்கும் நிலைப்பாட்டிலிருந்து கொண்டு சர்வதேச நாணய நிதிய இணக்கப்பாடுகளை மீளாய்வு செய்து புதிய ஏற்பாடுகளை எட்ட கலந்துரையாடுவோம் என்றார்.

அரசாங்கம் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும் என்றும் சர்வதேச வர்த்தகம், வெளிவிவகாரக் கொள்கைகளை சீராக முன்னெடுக்க ஜனநாயக மூலாதாரங்களின் பிரகாரம் அரச நிர்வாகத்தை முன்னெடுத்து முன்னோக்கி செல்ல தற்போதைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினார்.

சுற்றுலா பயணிகளுக்கு உலக நாடுகள் பயண எச்சரிக்கை விடுக்க காரணம் என்ன என்று கேள்வி எழுப்பிய அவர், சுற்றுலா மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்காக இலங்கையர்களுக்கு விசா சலுகைகளை பெற்றுக்கொடுக்க நாம் அவதானம் செலுத்தியுள்ளோம் என்று குறிப்பிட்டார்.

இந்தியர்களுக்கு இன்று 20 நாடுகளையும் தாண்டி விசா இன்றி பயணிக்கும் வாய்ப்பு இருக்கிறது என்றும் நாடாக நாம் பரந்த எண்ணப்போக்கில் செயற்பட வேண்டும் என்றும்குறிப்பிட்டார்.



## வரட்சியால் 37 ஆயிரம் ஏக்கர் வயல் நாசம்

குருநாகல் மாவட்டம் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு 19,388 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை அழிவடைந்துள்ள நிலையில் 22 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

வரட்சியால் 10 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான நெற்பயிர் பரப்பு அழிவடைந்துள்ள நிலையில், உடவளவ நெற்செய்கைப் பிரதேசங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இரண்டாவது இடத்தில் உள்ளதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

விவசாய அமைச்சுடன் இணைந்து தற்போது நாடளாவிய ரீதியில் வயல் நிலங்களுக்கு ஏற்பட்ட சேதங்களை கமநல காப்புறுதி சபை மதிப்பீடு செய்துவருகின்றது.

25 குழுக்கள் நெற்செய்கை பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், தலைமை அலுவலகத்திலிருந்து விசேட குழுவொன்று உடவளவ நெல் வலயத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

## வைத்தியர்களின் விடுமுறை இரத்து செய்யப்படவில்லை

வைத்தியர்களின் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் சில கட்டுப்பாடுகளின் கீழ் வைத்தியர்கள் தனிப்பட்ட தேவைகளுக்காக வெளிநாடுகளுக்கு செல்வதற்கு அனுமதி வழங்குவதற்கும் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாக ஊடகங்களில் வெளியான செய்திகளுக்கு பதிலளித்த போதே மேற்குறிப்பிட்ட விடயத்தைத் தெரிவித்தார்.

இவ்வாறான தீர்மானங்களை சுகாதார அமைச்சால் மாத்திரம் எடுக்க முடியாது என்றும் விடயதானத்துடன் தொடர்புடைய அதிகாரிகள் குழுவாலேயே இவ்வாறான தீர்மானங்கள் இறுதி செய்யப்படும் என்றும் சுட்டிக்காட்டினார்.

சில துறைகளில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறை மற்றும் வெளிநாடுகளுக்கு சென்ற வைத்தியர்கள் மீள நாடு திரும்பாமை உள்ளிட்ட காரணங்களால் வைத்தியசாலைகள் சிலவற்றின் செயற்பாடுகள் பாதிப்படைந்துள்ளன.

அண்மைக்காலத்தில் பெருமளவான வைத்திய நிபுணர்கள் நாட்டை விட்டு வெளியேறியதை அடுத்து வைத்திய ஆலோசகர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாக செய்தி வெளியாகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மலைநீலியம்மன் கோவில் காணிகளை விடுவிக்கவும்

இடம்பெயர்ந்த மக்கள், மீண்டும் 2007ஆம் ஆண்டு மீள குடியமர்ந்தபோது குறித்த ஆலயம், இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு ஆலயத்தின் இடிபாடுகள் அகற்றப்பட்ட நிலையில் தொல்லியலுக்குரிய இடமாகவும் கையகப்படுத்தப்பட்டு அம்மனின் விக்கிரகம் வீதியில் போடப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் 2009ஆம் ஆண்டு பௌத்த பிக்குகளால் இந்த ஆலயமானது பௌத்தத்துக்குரியது எனக்கூறி ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதோடு வெளி இடங்களில் இருந்து பாரிய கற்களை கொண்டுவந்து பல கட்டுமானங்களும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், கிராம மக்கள் காலாகாலமாக நெற்செய்கையை மேற்கொண்டுவந்த ஆலயத்தைச் சூழவுள்ள 50 ஏக்கருக்கு மேற்பட்ட வயற்காணிகளும் பறிமுதல் செய்யப்பட்டு, மக்களுடைய வாழ்வாதாரமும் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

தொல்லியலுக்குரிய இடமாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள குறித்த ஆலய வளாகத்தினுள் பிக்குகளின் கட்டுமானங்களுக்கான அனுமதியை வழங்கி பாராபட்சமான முறையில் தொல்லியல் திணைக்களம் செயற்படுவதாகவும் அப்பகுதி மக்கள் குற்றம் சுமத்தி வருவதோடு நீண்டகாலமாக வீதியோரத்தில் இருக்கின்ற தமது ஆலயத்தை குறித்த காணிக்குள் வைத்து வழிபட அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுக்கின்றனர்.

## கிடைக்கும் சந்தர்ப்பங்களை நாங்கள் தவற விடக்கூடாது

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், "மலையக மக்கள் சம்பந்தமாக குடியேறி 200 வருடங்கள் என்று கூறினாலும் கூட சரியான முறையில் 1977 ஆம் ஆண்டுக்கு பிறகுதான் எங்களுடைய மக்களின் மறுமலர்ச்சி ஏற்பட்டது என்பதை எவராலும் மறுக்க முடியாது.

இன்று இந்தச் சந்தர்ப்பத்தை நாங்கள் விட்டுக்கொடுக்ககூடாது. ஏனென்றால் எங்களிடையே பிரிவினை ஏற்பட்டிருக்கின்றது என்பதை இது எடுத்து காட்டுகின்றது. ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், முன்னாள் தமிழ் முற்போக்கு கூட்டனி உறுப்பினரும் கல்வி பிரதியமைச்சருமான அரவிந்த குமார் ஆகியோர் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டுள்ளனர்.

எனவே தமிழ் முற்போக்கு கூட்டணியினரும் அதேபோல் இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தில் பொதுச் செயலாளராக இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷும் கலந்து கொள்ள வில்லை.

யார் அழைத்தாலும் சரி, பிரச்சினைகளில் ஏதாவது தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நாம் செல்ல வேண்டும். அப்படி நம்பிக்கையில் சென்ற பிறகு பிரச்சினைகள் தீராவிட்டால் உலக அரங்கில் நாங்கள் பேச்சுவார்த்தைக்கு எடுத்து செல்லமுடியும்.

200 வருடங்கள் என்று நாங்கள் கூறும் பொழுது மன்னாரிலிருந்து மாத்தளைக்கு வந்த காலக்கட்டத்தை சொல்லுகின்ற பொழுது 1823 இல் இருந்து 1900 வரை மன்னாரிலிருந்து மாத்தளை வரை வந்திருக்கின்றோம்.

அதற்கு பிறகு அந்த மன்னார் பாதை மூடப்பட்டு கப்பல் மூலம் கொழும்புக்கு வந்துள்ளோம். இதையெல்லாம் நாம் தெரிந்துகொள்ள வேண்டும்" என்றார்.

## 4 நிமிடங்களில் கூறி சோழன் உலக சாதனை

பொகவந்தலாவையைச் சேர்ந்த சங்கரதாஸ் மற்றும் பாமினி தம்பதிகளின் மகள் கனிஷிகா. பொகவந்தலாவை ஹோலி ரோசரி மகா வித்தியாலயத்தில் 2ஆம் ஆண்டில் கல்வி கற்று வருகிறார்.

தெய்வத்தான் ஆகாதெனினும் முயற்சி தன் மெய் வருத்தக் கூலி தரும் என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க தன் தொடர் முயற்சியால் மனித உடலின் 423 உள் உறுப்புகளை படத்தில் அடையாளம் காட்டியவாறு 4 நிமிடங்களில் மனப் பாடமாக ஒப்புவித்து சோழன் உலக சாதனைப் புத்தகத்தில் இடம் பிடித்தார்.

இதற்கான உலக சாதனை நிகழ்வு 16-08-2023 அன்று பொகவந்தலாவை ஹேலிரோசரி மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

சோழன் உலக சாதனை முயற்சியை அந்த நிறுவனத்தின் இலங்கைக் கிளையின் துணைத் தலைவர் ஸ்ரீநாகவானி ராஜா நடுவராக நேரில் கண்காணித்து உறுதி செய்தார்.

சோழன் உலக சாதனை நிறுவனத்தின் பதக்கமும் சான்றிதழும் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சோழன் உலக சாதனை புத்தக நிறுவனத்தின் உப தலைவர் ஸ்ரீநாகவானி ராஜா, வித்தியாலத்தின் அதிபர் பி.குமரேசன், உப அதிபர் கிருபாகரன், பொகவந்தலாவ செலான் வங்கியின் முகாமையாளர், கேயார் லங்கா நிறுவனத்தின் இனைப்பாளர் இளையராஜா, ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டதுடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## குருந்தூர் மலை பொங்கலை குழப்ப முயல்கின்றனர்

வேண்டுகோள் விடுத்துள்ளார். குருந்தூர் மலையில் எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ள பொங்கல் நிகழ்வு தொடர்பில் முல்லைத்தீவு ஊடக அமையத்தில் புதன்கிழமை (16) இடம்பெற்ற ஊடக சந்திப்பிலே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், "தமிழர்களுடைய பாரம்பரிய பிரதேசமான குருந்தூர் மலையில், அங்கே வாழும் தமிழ் மக்கள், ஆதிசிவன் ஐயனார் ஆலயத்திலே தொன்று தொட்டு பொங்கல் வைத்து வழிபடும் போது இந்துக்கள் மாத்திரமல்ல முஸ்லிம் மற்றும் கிறிஸ்தவர்களும் கலந்து கொள்வது ஆதிகாலம் தொட்டு ஒரு நிகழ்வாக இருந்து கொண்டிருக்கின்றது.

கடந்த சில காலங்களாக அந்தப் பிரதேசங்களில் எந்த விதத்திலும் சம்பந்தம் இல்லாத மக்களால் ஆக்கிரமிப்பு நோக்கத்துடன் மேற்கொள்கின்ற இந்த விடயம் வேதனைக்குரியதாக கருதப்படுகின்றது.

ஆலய நிர்வாகம் மேற்கொண்டிருக்கின்ற பொங்கல் நிகழ்வுக்கு வன்னியிலே வாழ்கின்ற மக்கள் மாத்திரமல்லாமல், வடக்கு, கிழக்கிலே உள்ள தமிழ் பேசும் மக்கள் அத்தனை பேரும் குறித்த நிகழ்வுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

குறித்த பிரதேசத்தை ஆக்கிரமிப்பதற்காக பல நூறு கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இருந்து வந்து அவற்றை குழப்புகின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்ற இந்த நேரத்தில் ஆலய பரிபாலன சபையினர் பொங்கல் நிகழ்வை நடத்துவதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இது எங்களுடைய தாயக பிரதேசம். இப் பிரதேசத்தை பாதுகாப்பது எங்களுடைய கடமை" என்றார்.

## 6 இலட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு கொடுப்பனவு வழங்க தீர்மானம்

517,962 முதியவர்கள், 88,602 மாற்றுத்திறனாளிகள் மற்றும் 41,119 சிறுநீரக நோயாளர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்படும் என்றும், காத்திருப்போர் பட்டியலில் உள்ளவர்களும் இதில் அடங்குவர் என்றும் அமைச்சர் வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முதியோருக்கான கொடுப்பனவுகள் தபால் நிலையங்களிலிருந்தும், ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கான கொடுப்பனவுகள் பிரதேச செயலகங்களில் வழங்கப்படும் எனவும் கூறியுள்ளார்.

இதேவேளை, அஸ்வெசும நலன்புரி நன்மைகள் சபையின் தலைவர் தனிப்பட்ட காரணங்களுக்காக இராஜினாமா செய்துள்ளதாகவும் அதன் காரணமாக திட்டத்தை செயல்படுத்துவதில் தாமதம் ஏற்படாது என்றும் குறிப்பிட்டார்.

விசேட தர ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தரான ஜயந்த விஜேரத்னவின் பெயர் புதிய தலைவராக அரசியலமைப்பு சபைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

கணக்குகளைத் திறப்பது அல்லது ஆட்சேபனைகள் மற்றும் மேல்முறையீடுகளைச் சரிபார்ப்பது உள்ளிட்ட நடவடிக்கைகளின் பின்னர் பயனாளிகளுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதை இந்த இராஜினாமா பாதிக்காது என்றும் தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் வங்கித் தேவையை முடிந்தளவு விரைவாக முடிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

## உரிமைகளை வென்றெடுக்க அணிதிரளுமாறு அழைப்பு

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் குருந்தூர்மலை ஆதிசிவன்ஐயனார் ஆலய நிர்வாகம் மற்றும் அரசியல் தலைவர்கள் இணைந்து ஊடக சந்திப்பு ஒன்றை நிகழ்த்தியே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த ஊடக சந்திப்பில் குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய பரிபாலன சபை தலைவர் து.விக்னேஸ்வரன் ஆலய நிர்வாக சபை உறுப்பினர் மற்றும் முன்னாள் வடமாகாண விவசாய அமைச்சர் கந்தையா சிவநேசன் முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு கருத்துக்களை தெரிவித்தனர்

இந்த விடயமானது நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டநிலையில், தொல்லியல் திணைக்களம் சைவவழிபாடுகளை மேற்கொள்தற்கு எந்தத் தடையுமில்லை எனத் தெரிவித்திருந்தது.

அதற்கமைய இந்தப் பொங்கல் வழிபாடுகள் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் எனவே அனைவரும் இந்தப் பொங்கல் விழாவில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றும் அழைப்பு விடுத்துள்ளனர்.

## தலைவராக அஜந்த மென்டிஸ் நியமனம்

வைத்தியர் அஜித் மென்டிஸ் இதற்கு முன்னர் சிறிது காலம் சுகாதார சேவைகள் பணிப்பாளராக கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 7 அடுக்கு பாதுகாப்பை மீறி நுழைந்த யாழ். இளைஞன்

இரவு 10 மணி அளவில் குடியுரிமை அலுவலக கருமபீட பகுதியில் ஊழியர் ஒருவரின் செல்போனை திருட முயன்றுள்ளார். இதையடுத்து, அந்தஇளைஞரைப் பிடித்து அடித்தஅதிகாரிகள், விமான நிலைய முகாமையாளர் அறையில் ஒப்படைத்தனர்.



விசாரணையில், அவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தினேஷ் ஞானசூரியன் (35) என்பதும், 3 மாத விசாவில் இலங்கையிலிருந்து சென்னை வந்திருப்பதும் தெரியவந்தது.

அவரிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருவதுடன், 7 அடுக்கு பாதுகாப்பையும் மீறி, ஒருவர் எந்த ஆவணமும் இல்லாமல் விமான நிலையத்துக்குள் சென்றது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## தேசிய காங்கிரஸின் முன்மொழிவு ஜனாதிபதி ரணிலிடம் கையளிப்பு

ஏ.எல்.எம். அதாஉல்லா, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் வைத்து செவ்வாய்க்கிழமை (15) மாலை இவ்வறிக்கை கையளிக்கப்பட்டுள்ளதுடன், தேசிய காங்கிரஸின் சிரேஷ்ட பிரதித் தலைவர் டாக்டர் ஏ. உதுமாலெப்பை, பொருளாளர் ஜே.எம். வஸீர் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

13 ஆவது திருத்தம் தொடர்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் யோசனைகளை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்திருந்த வேண்டுகோளை ஏற்றே தேசிய காங்கிரஸ் தனது முன்மொழிவுகளை சமர்ப்பித்திருக்கிறது.

இம்முன்மொழிவுகள் பற்றி விரைவில் மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும் என்று கட்சியின் தலைவர் ஏ.எல்.எம். அதாஉல்லா தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 13 ஆம் திருத்த சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தனித்தனியாக பிரிந்திருக்க

## நாடு கடத்தப்பட்ட 54 பேர் நாட்டை வந்தடைந்தனர்

மொனராகலை, காலி மற்றும் மாத்தறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களும் அடங்குகின்றனர்.

நாடு கடத்தப்பட்டவர்கள், தங்களது ஆரம்ப பணியிடங்களை விட்டு வெளியேறி, குவைத் நாட்டின் விதிகளை மீறி வேறு இடங்களில் வேலையில் ஈடுபட்டதாக கூறப்படும் நிலையில், இலங்கை தூதரகத்தில் தஞ்சம் கோருவதற்கு முன்பு பல்வேறு இடங்களில் தங்கியிருந்தாக தெரிவிக்கப்படுகிறது.

குவைத்தில் உள்ள இலங்கை தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட தற்காலிக கடவுச்சீட்டிலேயே அவர்கள் இலங்கைக்கு அனுப்பப்பட்டனர்.

முன்னர் அறிவிக்கப்பட்டதற்கு அமைய, குவைத்தில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் சுமார் 2 ஆயிரம் பணியாளர்கள் நாடு திரும்புவதற்கு பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



‘போதையை ஒழிப்போம்’

## புத்தளம் இளைஞனின் சைக்கிள் பயணம்

எம்.யூ.எம் சனூண்

போதைப்பொருள் பாவனையிலிருந்து இளைஞர்களை மீட்டெடுப்பதில் துரிதமாக செயற்பட்டு வரும் ‘புத்தளம் லகூன்’ அமைப்பின் உறுப்பினரான தில்லையடி எல்.ஏ.எம் நப்ஸான், இலங்கை பூராவும் விழிப்புணர்வு சுற்றுப்பயணத்தை புத்தளத்தில் இருந்து சைக்கிளில் ஆரம்பித்துள்ளார்.

இதன் ஆரம்ப நிகழ்வு, லகூன் அமைப்பின் தலைவர் எம்.ஐ.எம் இல்ஹாம் தலைமையில் (15) புத்தளம், கொழும்பு முகத்திடலில் நடைபெற்றது.

புத்தளம் நகர சபை செயலாளர் எல்.பீ.ஜி பிரீத்திகா, இந்தச் சைக்கிள் சுற்றுப்பயணத்தை ஆரம்பித்து வைத்தார். உலமாக்கள், லகூன் அமைப்பின் அங்கத்தவர்கள், புத்தளம் வர்த்தக சங்க பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

போதைப்பொருள் பாவனையிலிருந்து இலங்கை வாழ் இளைஞர்களை மீட்டெடுத்தல், நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேண்டி சுற்றுலா பயணிகளை நாட்டுக்கு வரவழைத்தல், பயங்கர விபத்துகளில் இருந்து நாட்டு மக்களை பாதுகாத்தல் ஆகிய மூன்று விழிப்புணர்வு திட்டங்களை முன்வைத்து இந்தச் சைக்கிள் பயணம் ஆரம்பமாகியுள்ளது.

கால்நடை வைத்தியர்களின் அசமந்தம்

# முழங்காவிலில் பசுமாடுகள் உயிரிழப்பு

சுப்பிரமணியம் பாஸ்கரன்

பூநகரி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட முழங்காவில் பகுதியில் கால்நடை வைத்தியர்களின் அசமந்தப் போக்கு காரணமாக, வாழ்வாதாரத்துக்காக வளர்க்கப்பட்ட தலா ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான நல்லின பசு மாடுகள் நான்கு அடுத்தடுத்து உயிரிழந்துள்ளன.

பண்ணையாளர் ஒருவரது பசுமாடு நோய்வாய்ப்பட்ட நிலையில், பூநகரி கால்நடை வைத்தியரை பண்ணையாளர் தொடர்பு கொண்டபோதும், வைத்தியர் அங்கு செல்லாத நிலையில், அந்தப் பசுமாடு உயிரிழந்தது.

மறுநாள், மற்றைய பசுமாடும் அவ்வாறு நோய்வாய்ப்பட்ட நிலையில், கால்நடை வைத்தியருக்கு அறிவித்திருந்த போதும், நான்கு நாள்களாகியும் அதற்கான உரிய சிகிச்சைகள் வழங்கப்படாமையால் அந்தப் பசுமாடும் உயிரிழந்தது.

இவ்வாறு, இந்தப் பிரதேசத்தை சேர்ந்த மேலும் இருபண்ணையாளர்களின் பசுமாடுகளும் நோய்வாய்ப்பட்ட நிலையில், பூநகரி கால் நடை வைத்தியருக்கு அறிவித்தும் எதுவித சிகிச்சைகளும் வழங்கப்படாத நிலையில், அந்தப் பசுமாடுகளும் உயிரிழந்துள்ளன.

இந்த விடயம் தொடர்பாக, பூநகரி கால்நடை வைத்திய அதிகாரி பணிமனையைத் தொடர்பு கொண்டபோது, அலுவலகத்திலிருந்து பொறுப்புணர்வுடன் கூடிய பதில் எதுவும் கிடைக்கவில்லை. குறித்த பகுதிக்கு பொறுப்பான அதிகாரி, தான் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் இருப்பதாகவும் மற்றுமொரு பெண் வைத்திய அதிகாரி, பண்ணையாளர்கள் தன்னை நேரடியாகத் தொடர்பு கொண்டால் மாத்திரமே சிகிச்சை வழங்க முடியும் என்றும் தெரிவித்திருந்தார். அத்துடன், கால்நடைகள் இறந்தமைதொடர்பில்எந்தக்களப்பரிசோதனைகளையோ அல்லது மருத்துவ பரிசோதனைகளையோ மேற்கொள்ளவில்லை என்றும் பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.



அண்மையில், சின்னம்மை நோய் காரணமாகவும் அதிகளவான கால்நடைகள் உயிரிழந்த போதும், அது தொடர்பாக கால்நடை வைத்திய அதிகாரிகள் குறித்த பகுதிகளுக்கு வரவில்லை என்பதையும் பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.




## தண்ணீர் பௌசர் கையளிப்பு

டி. சந்ரு, செ. திவாகரன்

நுவரெலியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் வாழும் பொது மக்களின் நலன் கருதி சுத்தமான குடிநீர் வழங்கல் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்காக ஒரு கோடி 35 இலட்சம் ரூபாய் பெறுமதியான தண்ணீர் பௌசர் ஒன்றினை கோயிகா மற்றும் யூ. என் ஹெபிடாட் நிறுவனங்கள் ஒன்றிணைந்து உத்தியோகபூர்வமாக கையளித்தன.

இந்நிகழ்வு நுவரெலியா மாவட்ட செயலாளர் நந்தன கலபொட தலைமையில் நுவரெலியா மாவட்ட செயலகத்தில் புதன்கிழமை (16) நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நுவரெலியா மாவட்ட செயலாளர், கோயிகா நிறுவனத்தின் பணிப்பாளர் கிம், யூ.என் ஹெபிடாட் நிறுவனத்தின் முகாமையாளர் சலிம் கறீம் சாடா மற்றும் இரு நிறுவனத்தின் ஏனைய உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர்.

## “தலையில் ஏதாவது இருந்திருப்பின் இப்படி சொல்லியிருக்கமாட்டார்”

மு. தமிழ்ச்செல்வன்

மிக மோசமான யுத்தத்தை கடந்து வந்துள்ள நாட்டில், இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தையும் சமத்துவத்தையும் கட்டியெழுப்ப வேண்டிய நிலையில், தலையில் எதுவுமில்லாதவர்கள் போன்று மேர்வின் சில்வா கருத்து தெரிவித்திருப்பது கண்டனத்திற்குரியதும் கவலைக்குரியதுமாகும் என சமத்துவக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான மு. சந்திரகுமார் தெரிவித்தள்ளார்.

வடக்கில் விகாரைகள் மீதோ அல்லது பிக்குகள் மீதோ கை வைத்தால் தமிழர்களின் தலைகளுடன் களனிக்கு திரும்புவேன் என மக்கள் மத்தியில் வெறுப்பையும் இனக்குரோதத்தையும் ஏற்படுத்தும் வகையில் அவர் பேசியிருப்பது தலையில் எதுவும் இல்லாதவர்களின் பேச்சு போன்றே அமைந்துள்ளது.



இந்த நாட்டில் இன்னும் நிலையான அமைதி நிலவாமைக்கு ஒவ்வோர் இனத்திற்குள்ளும் ‘மேர்வின் சில்வா’ போன்றவர்கள் இருப்பதே காரணமாக இருக்கிறது. இவர்கள் இந்த நாட்டின் சாபக்கேடானவர்கள் ஆவார்.

ஒவ்வோர் இனத்திற்குள்ளும் இருக்கின்ற ‘மேர்வின் சில்வா’ போன்றவர்கள் சமூகத்திலிருந்து அகறப்பட வேண்டியவர்கள். வெறுப்பு பேச்சுகள், அப்பாவி மக்களிடம் இனவாதத்தை தூண்டிவிடுகின்ற செயற்பாடுகள் இந்த நாட்டை ஒரு போதும் நிரந்தர அமைதியை நோக்கி கொண்டு செல்லாது என்றார்.

## மீன்களை அள்ளும் மீனவர்கள்



பாறுக் ஷிஹான்

திடீர் வானிநிலை மாற்றம் காரணமாக அதிகளவான கீரி மீன்கள் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை பிராந்திய கடற்கரைகளில் பிடிபடுகின்றன.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 3 வகையான மீன்களான வளையா, சூரை, கிளவல்லா ஆகிய மீன்கள் கரைவலைகள் மூலம் பிடிக்கப்பட்டு, பல இலட்சம் ரூபாய் வரைக்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இவ்வாறு மருதமுனை, சாய்ந்தமருது, கல்முனை பகுதிகளில் கீரி இன மீன்கள் செவ்வாய்க்கிழமை (15) அதிகளவாக கரைவலைகளில் பிடிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டன.

குறித்த கீரி மீன்களின் பெறுமதி 1 கிலோ கிராம் சுமார் 400 முதல் 500 வரை விற்பனையாவதுடன் இதேவேளை இவ்வாறு பிடிக்கப்படும் மீன்களால் ஒரு மீனவரின் நாள் வருமானமாக 10 முதல் 20 இலட்சமாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

தற்போது மருதமுனை கல்முனை கடற்கரையில் கரை வலை மற்றும் ஆழ்கடல் மீன்பிடி தூண்டில் என்பன தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்ற நிலையில், கரைவலை மீனவர்களுக்கு இவ்வாறான சிறிய, பாரிய மீன்கள் தொகுதியாக பிடிபடுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## போதைவஸ்துக்கு எதிரான சமூக எழுச்சி பிரகடனம்

எம் எஸ் எம் நூர்தீன்

காத்தான்குடியில் எதிர்வரும் (18) வெள்ளிக்கிழமை ஜும்ஆ தொழுகையின் பின்னர் போதைவஸ்துக்கு எதிரான சமூக எழுச்சி பிரகடனம் செய்யப்படவுள்ளது.




இது தொடர்பாக ஆராயும் விசேட கூட்டம் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சம்மேளன மாநாட்டு மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (15) இரவு இடம்பெற்றது.

சம்மேளன தலைவர் ரவூப் ஏ மஜீத் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி ஹாரூன் (றஸாதி) சம்மேளன பொதுச் செயலாளர் அஷ்ஷெய்ஹ் சபீல் நழீமி சம்மேளன பொருளாளர் அன்ஸார் உட்பட சம்மேளன முக்கியஸ்தர்கள், காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபை பிரதிநிதிகள், ஜும்ஆ பள்ளி வாயல்களின் நிர்வாகிகள் சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் என பலரும் கொண்டனர்.

இதன்போது, போதை வஸ்துக்கு எதிரான சமூக எழுச்சி பிரகடனம் செய்வது தொடர்பாக ஆராயப்பட்டதுடன் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

காத்தான்குடியில் ஊர் தழுவிய ரீதியில் எதிர்வரும் (18) வெள்ளிக்கிழமை போதை வஸ்துக்கு எதிரான சமூக எழுச்சி பிரகடனம் செய்வது.

அன்றைய தினம் வெள்ளிக்கிழமை ஊரில் இரண்டு பள்ளிவாயல்களில் மாத்திரமே ஜும்ஆவை நடத்துவது.

அன்றைய தினம் ஜும்ஆ தொழுகையை 12.45 மணிக்கு நிறைவு செய்து குட்வின் சந்தியை நோக்கி பேரணியாக செல்லுதல்.

குட்வின் சந்தியில் போதை வஸ்துக்கு எதிரான சமூக எழுச்சி பிரகடனத்தை பிரகடனம் செய்தல்.

இந்தப் பிரகடன நிகழ்வில் கலந்து கொள்ள அரச உயரதிகாரிகள், பாதுகாப்பு உயரதிகாரிகளை அழைப்பது.

இது தொடர்பாக பொது மக்களை விழிப்பூட்டல் செய்வது போன்ற தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

## பௌத்த கொடிகளை அகற்றியவர் கைது

எப்.முபாரக்

திருகோணமலை, நெல்சன் சினிமா திரையரங்கிற்கு அருகில் அரச மரத்தில் தொங்கவிடப்பட்டிருந்த பௌத்த கொடிகளை அகற்றியதுடன் தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமான பகுதிக்குள் நுழைந்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் செவ்வாய்க்கிழமை (15) மாலை இடம்பெற்றுள்ளது. இவ்வாறு கைது செய்யப்பட்டவர் உப்புவெளி, ஆனந்தபுரி முதலாவது ஒழுங்கையில் வசித்து வரும் 45 வயதுடையவர் எனவும் தெரியவந்துள்ளது.

திருகோணமலை நகர் பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் நெல்சன் சினிமா திரையரங்குக்கு முன்னால் உள்ள காணியில் பெரும்பான்மை இனத்தவர்களாலும் வெளிநாட்டு பௌத்த துறவிகளாலும் பிரித் ஓதப்பட்டு கொடிகள் கட்டப்பட்டன.

இந்நிலையில் தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமான குறித்த பகுதிக்குள், மதுபோதையில் நுழைந்து கொடிகளை அகற்ற முற்பட்ட போது குறித்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகவும் தெரிய வருகின்றது.



## தங்கம் வென்ற மாணவியை வீடு தேடிச் சென்று பாராட்டு

வி.ரி சகாதேவராஜா

தேசிய கணித ஒலிம்பியாட் போட்டியில் தங்கப் பதக்கம் வென்று தேசிய ரீதியில் சாதனை புரிந்த மல்வத்தை விபுலானந்தா கல்லூரி மாணவி சிவரூபன் ஜினோதிகாவை, காரைதீவு முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், நேற்று (16) வீடு தேடிச் சென்று பாராட்டினார்.

இதன்போது, கனடாவில் வாழும் பரோபகாரி அசோகன், உபயமளித்த 50 ஆயிரம் ரூபாய் பணத்தை கையளித்திருந்ததுடன் மாணவிக்கு பொன்னாடை போர்த்தி கௌரவித்தார். பாடசாலை அதிபர் திருமதி கௌசல்யா ஞானேஸ்வரன், உதவி கல்விப் பணிப்பாளர் வி.ரி சகாதேவராஜா உள்ளிட்ட ஆசிரியர்களும் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

## “கல்வி மட்டும் வாழ்க்கை அல்ல”

மு.தமிழ்ச்செல்வன்

“தனியே கல்வி மட்டும் வாழ்க்கை அல்ல; அதையும் தாண்டி நிறைய உண்டு. எனவே மாணவர்கள் கல்வியோடு விளையாட்டு, கலைகள் என தங்களை வளர்த்துக்கொள்வதோடு நல்ல பண்புகளையும் ஒழுக்கத்தையும் கொண்டிருக்க வேண்டும்” என, பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த மட்டகளப்பு இளைஞன் தேவேந்திரன் மதுசிகன் கிளிநொச்சியில் மாணவர்கள் மத்தியில் தெரிவித்தார்.

கிளிநொச்சி நீர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சியில் நீச்சல் பயிற்சிகளை வழங்கி வரும் அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த தம்பு பஞ்சரட்ணத்தை சந்திப்பதற்காக கிளிநொச்சிக்கு வருகை தந்த தேவேந்திரன் மதுசிகன், கிளிநொச்சி விஞ்ஞானக் கல்வி நிலையத்தின் மாணவர்களிடம் ஊக்குமுட்டும் வகையில் கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தேவேந்திரன் மதுசிகனின் தேவைகள் கருதி, அவரை மேலும் ஊக்குவிக்கும் வகையில் கிளிநொச்சி நீர் விளையாட்டுக் கழகம், 50 ஆயிரம் ரூபாய் நிதியுதவியை வழங்கியதோடு, அவரைப் பாராட்டி சான்றிதழையும் வழங்கி வைத்தது. இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் த. சத்தியமூர்த்தி, கிளிநொச்சி நீர் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் வைத்தியர் மா. தவராசா, அதிபர் பங்கயைற்ச்செல்வன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.



**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 (2) ஆம் பிரிவின் பிரகாரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியின் கீழ் காணும் மாற்றம் தொடர்பான அறிவித்தலை இத்தால் நாம் வழங்குகின்றோம்.

**கம்பனியின் பழைய பெயர்:** குரேஷியோ இன்டர்நேஷனல் லங்கா (பிரைவட்) லிமிடட்

**கம்பனியின் புதிய பெயர்:** டொரன்ட் இன்டர்நேஷனல் லங்கா (பிரைவட்) லிமிட்டட்

**பதிவு அலுவலக முகவரி:** லெவல் 26, ஈஸ்ட் டவர், வர்ல்ட் ட்ரேட் சென்டர், எக்லன் ஸ்குயார், கொழும்பு 01.

**கம்பனியின் இலக்கம்:** பீ வீ 107805

**டைரக்டர்**
**எம் என் எஸ் (அசைன்மன்ட்ஸ்) (பிரைவட்) லிமிட்டட்**
**கம்பனியின் செயலாளர்கள்**

# சுருங்கும் அரச சேவையும் அதிகரிக்கும் வேலைவாய்ப்பு இன்மையும்

கல்வி பொதுத் தராதர உயர்தரத்தை கற்று சித்தியெய்தியவுடன் எப்படியாவது, அரச சேவைக்குள் நுழைந்துவிடவேண்டும் என்பதே பலரது கனவாக இருக்கும். அக்கனவு சிலருக்கு நனவாகி விடும்; இன்னும் சிலருக்கு கானல் நீராகிவிடும்.

எனினும், தனியார் துறைகளில் ஒருசில துறைகளுக்குள் தலையை நுழைத்துக்கொண்டவர்கள், வெகு சீக்கிரத்தில் உயர்பதவிகளை எட்டிவிடுவர். அது அவர்களின் அர்ப்பணிப்புக்குக் கிடைத்த பரிசாகும். இன்னும் சிலர், ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலைக்குள் நகர முடியாது தவித்துக்கொண்டிருப்பர்.

இவ்விரண்டில் ஒன்றில் கால்களை ஊன்றிக்கொள்ளாதவர்கள், சொந்த வர்த்தகத்தை ஆரம்பித்து சொந்தக்காலில் நிற்பர். இன்னும் சிலர், தங்களுக்கு கீழ் இரண்டொருவரை வேலைக்கு அமர்த்திக்கொண்டு, வர்த்தகத்தை முன்னெடுத்துச் செல்வர்.

அரச துறைகளில் இருப்போருக்கு விடுமுறை, அரச சம்பளம், இதர கொடுப்பனவுகள் இவையெல்லாம் கிடைக்கும். தனியார் துறைக்குள் நுழைந்துகொண்டவர்களுக்கு வியாபாரத்துக்கு ஏற்பவே அவர்களுடைய சம்பளம் அதிகரிக்கப்படும்.

கொரோனாவுக்குப் பின்னர், பல தனியார் நிறுவனங்களில் எவ்விதமான கொடுப்பனவுகளும் வழங்கப்படவில்லை. சம்பள அதிகரிப்பு என்ற பேச்சுக்கே இடமில்லாது போய்விட்டது.

பொருளாதார நெருக்கடிக்குப் பின்னர், ஒவ்வொரு நிறுவனத்திலும் ஆட்குறைப்புகள் இடம்பெற்றன. இன்னும் சிலர் சுய விருப்பின் பேரில் விலகி, வெவ்வேறு துறைகளில் காலடி எடுத்து வைத்துவிட்டனர்; பலரும் வெளிநாடுகளுக்கு பறந்துவிட்டனர்.

மெல்லவும் முடியாது, விழுங்கவும் முடியாதவர்கள், கிடைக்கும் வருமானத்தை வைத்து, குடும்பத்தை கொண்டு நடத்துகின்றனர். பொருளாதார நெருக்கடி நீடிக்குமாயின், இவர்களின் நிலைமையே திண்டாட்டமாகிவிடும்.

ஒழுங்கான வேலைவாய்ப்பு இன்மையால், இளம் வயதுகளைச் சேர்ந்தவர்கள் மன உளைச்சலுக்கு உள்ளாக்கிக்கொண்டிருக்கின்றனர். வாழ்க்கையில் அடுத்தடுத்த கட்டணங்களில் காலடியெடுத்து வைக்கமுடியாது திணறிக்கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில்தான், அடுத்த வருடத்தில் அரச சேவையில் ஆட்சேர்ப்பு இல்லை என்றொரு தகவல் வெளியாகியுள்ளது. இது, அரச சேவையை எதிர்ப்பார்த்து நிற்போரின் தலையில், கல்லைத்தூக்கி போட்டதைப் போலவே இருக்கிறது.

பொருளாதார நெருக்கடியை கவனத்தில் கொண்டே, இவ்வாறான தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. எனினும், அத்தியாவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

அரச நிறுவனங்களுக்கு வகைதொகையின்றி ஆட்களை சேர்த்துவிட்டு, இரண்டொரு வருடங்களின் பின்னர் நட்டஈடு கொடுத்து, வீட்டுக்கு அனுப்புவதை விடவும், அரச சேவையை திறன்மிக்க சேவையாக்க வேண்டும். பல விடயங்களை கணினி மயப்படுத்துவதன் ஊடாக, இரண்டொருவரின் வேலைகளை ஒருவரே செய்து முடிக்கலாம்.

உதாரணமாக, ஒருசில தபால் அலுவலகங்களுக்குச் சென்றால், பணம் வாங்க ஒருவர், முத்திரை கொடுக்க மற்றுமொருவர், கையொப்பமிட இன்னுமொருவர், இப்படியாக அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஆகையால், அரச சேவையை வினைத்திறன்மிக்க சேவையாக மாற்றுவதற்கான வழிமுறைகளை கையாள்வதே உசிதமானது.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# அனைத்துப் பெண்களுக்கும் பயன்தரும் பொது சிவில் சட்டம்

பா. பிரபாகரன்

பொது சிவில் சட்டம் குறித்த பேச்சு எழுந்த உடனேயே அரசியல் பேச்சு நடைபெறும் பொதுத் தளம் இரண்டாக பிளவுபட்டு நிற்கிறது. பா.ஜ.கவும் அதன் தோழமைக் கட்சிகளும் ஒருபுறமாகவும் எதிர்க்கட்சிகள் மற்றொரு புறமாகவும் நின்று வாதப்பிரதிவாதங்களை எடுத்து வைக்கிறார்கள்.

இந்த உரத்த சத்தத்தில் உண்மை அமிழ்ந்து போகும் அபாயமும் உள்ளது. இந்துக்களுக்கும் ஏனைய மதப் பிரிவினருக்கும் இடையே ஒரு போர் நடப்பது போலவும், அந்தப் போரில் நாம் வென்றாக வேண்டும் என்பதற்காகவே பொது சிவில் சட்டத்தை எதிர்க்க வேண்டும்

> **மத வழிபாட்டு முறைகள் கலாசார சடங்குகள் இவற்றில் எல்லாம் இந்தச் சட்டம் தலையிட முடியாது. அதேபோல், திருமணம் என்று சொன்னவுடனேயே எப்படி திருமணம் செய்ய வேண்டும்? யாரை திருமணம் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் இந்தச் சட்டம் எதுவும் கூற முடியாது. தாலி கட்ட வேண்டுமா? மோதிரம் மாற்றிக்கொள்ள வேண்டுமா? ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமா என்பதெல்லாம் அவரவரது தனிப்பட்ட பண்பாட்டு வழக்கங்களின் அடிப்படையில் செய்து கொள்ளலாம்**

என்பது போலவும் ஒரு பார்வை இருக்கிறது.

அரசியலமைப்புச் சட்டம் கொடுத்த தனிமனித சுதந்திரத்திலும் மத வழிபாட்டு உரிமைகளிலும் அரசு தலையிட முடியாது; தலையிட விடமாட்டோம் என்று மார்தட்டி அறைகூவல் விடப்படுகிறது.

## திருமணம்

கிறிஸ்தவர்கள் தங்களது திருமணத்தின்போது இனி மோதிரம் மாற்றிக் கொள்ள முடியாது; தாலி தான் கட்ட வேண்டும் என்பதுபோலவும், அதேபோல இஸ்லாமியர்கள் நிக்காணாமா எழுத முடியாது; அதற்குப் பதிலாக தாலி கட்ட வேண்டும் என்பது போலவும் பொய் பிரசாரங்கள் அவிழ்த்து விடப்படுகின்றன.

திருமணம் எப்படி நடைபெற வேண்டும் என்பதில், ஏதோ அரசு தலையிடுவது போல பிரசாரம் செய்யப்படுகிறது.

மொத்தத்தில் இது முஸ்லிம்களை குறிவைத்து இயற்றப்பட்ட சட்டம் என்ற ஒரு கருத்து எல்லாத் தரப்பிலும் நிறுபூத்த நெருப்பு போல் கணன்று கொண்டிருக்கிறது. பொது சிவில் சட்டத்தைப் பற்றி யாரேனும் கருத்துக் கூற முன் வந்தால், அவர்களிடம் மூன்று கேள்விகளைக் கேட்டாலே போதும்; தெளிவான முடிவுக்கு வந்து விடலாம்.

1. பொது சிவில் சட்டம் எதைப்பற்றியது
2. பொது சிவில் சட்டத்தால் யாருக்கு பயன்
3. இந்தச் சட்டத்தால் யாருக்கு நட்டம்

பொது சிவில் சட்டம் எதைப் பற்றியது? பொது சிவில் சட்டம் திருமணம், விவாகரத்து, வாரிசுரிமை எனும் இந்த மூன்று விடயங்களில் மட்டுமே சம்பந்தப்பட்டது.

மத வழிபாட்டு முறைகள் கலாசார சடங்குகள் இவற்றில் எல்லாம் இந்தச் சட்டம் தலையிட முடியாது. அதேபோல், திருமணம் என்று சொன்னவுடனேயே எப்படி திருமணம் செய்ய வேண்டும்? யாரை திருமணம் செய்ய வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் இந்தச் சட்டம் எதுவும் கூற முடியாது.

தாலி கட்ட வேண்டுமா? மோதிரம் மாற்றிக்கொள்ள வேண்டுமா? ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமா என்பதெல்லாம் அவரவரது தனிப்பட்ட பண்பாட்டு வழக்கங்களின் அடிப்படையில் செய்து கொள்ளலாம்.

திருமணத்தைப் பொறுத்தவரையில், இந்தச் சட்டம் ஒன்றே ஒன்றைப் பற்றி மட்டும்தான் கவலைப்படுகிறது. அதாவது, பெண்களின் திருமண வயது. பிரசவத்தின்போது இறந்து போகும் தாய்மார்களின் எண்ணிக்கையில் 70% பெண்கள் 20 வயதுக்கு உட்பட்டவர்களாகவே இருக்கிறார்கள் என்று உலக சுகாதார நிறுவனத்தின் ஆய்வு கூறுகிறது.

எனவே, ஒரு பெண் வயதுக்கு வந்தால் மட்டும் போதாது; அவள் வளர்ச்சி அடைந்து தாயாகும் தகுதியை அடைவதற்கு மேலும் சில ஆண்டுகள் ஆகின்றன என்கிறது விஞ்ஞானம். இதன் அடிப்படையில் திருமண வயது முடிவு செய்யப்படுகிறது.

இதன் காரணமாக, நமக்கு உபரியாக கிடைக்கும் ஒரு இலாபம், அந்த பெண் கல்லூரிக்கு செல்லும் வாய்ப்பையும் பெறுகிறாள். இதை உறுதி செய்வதற்காக ஒரு சட்டம் கொண்டு வந்தால், அதில் எந்த பெற்றோரும் குறை காண மாட்டார்கள் என்பது உறுதியான உண்மை.

> **சொல்லப்போனால், உடைமைகளை பாதுகாப்பதில் ஆண்களை விட பெண்கள் தான் சிறந்தவர்கள். தவறான வாழ்க்கை வாழ்ந்தான் சொத்தை இழந்தான் என்று பல ஆண்களைப் பற்றி நாம் படித்திருக்கிறோம். எங்காவது அதுபோன்று பெண்களைப் பற்றி கேள்விப்பட்டது உண்டா? இப்படிப்பட்ட பொறுப்பும் கடமை உணர்வும் உடைய இந்திய பெண்களுக்கு சொத்தில் சம உரிமை தராத நிலையில், அதற்காக ஒரு சட்டம் வந்தால் நாம் மகிழ்ச்சி அடைய வேண்டாமா?**

## விவாகரத்து

அடுத்ததாக விவாகரத்து. ஏதோ ஒரு காரணத்துக்காக ஒரு பெண், கணவனிடம் இருந்து பிரிந்து வருகிறாள். காப்பாற்ற வேண்டிய சூழ்நிலையில் இரண்டு குழந்தைகள். இப்படிப்பட்ட பெண்ணுக்கு வரக்கூடிய கண்ணீர், சோகம், மனக்குமுறல், சமுதாயம் அவளை பார்க்கும் பார்வை இவையெல்லாம் உலகில் உள்ள அனைத்து பெண்களுக்கும் பொதுவானவையாகவே இருக்கின்றன. இதில் மதம், இனம், சாதி, நாடு, மொழி என்ற எந்த வேறுபாடும் கிடையாது.

இப்படிப்பட்ட நிலையில் உள்ள ஒரு பெண்ணுக்கு உதவிக்கரம் நீட்டாத ஒரு நாடோ சமுதாயமோ இருந்தென்ன போயென்ன? எனவேதான் இந்தச் சட்டத்தில் ஒரு பெண், எந்த மதத்தைச் சேர்ந்தவளாக இருந்தாலும் அவளுக்கு ஜீவனாம்சமும் மாதாந்திர உரிமை தொகையும் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்காக இந்தச் சட்டம் கொண்டு வரப்படுகிறது. அதை ஏற்றுக் கொள்வதில் நமக்கு என்ன தயக்கம் இருக்க முடியும்?

## சொத்துரிமை

இதில் முக்கியமாக பேசப்படுவது சொத்துரிமை மற்றும் தத்தெடுக்கும் உரிமை. ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானம்; தாயின் காலடியில் சொர்க்கம் உள்ளது; சிறந்த தாய் சிறந்த நாட்டை உருவாக்குகிறாள் என்றெல்லாம் பேசக்கூடியவர்கள், சொத்து என்று வந்துவிட்டால் மட்டும் சமச்சீராகப் பார்க்காமல் போவது ஏன் என்பது மிக மிக வருத்தத்துக்குரியது.

சொல்லப்போனால், உடைமைகளை பாதுகாப்பதில் ஆண்களை விட பெண்கள் தான் சிறந்தவர்கள். தவறான வாழ்க்கை வாழ்ந்தான் சொத்தை இழந்தான் என்று பல ஆண்களைப் பற்றி நாம் படித்திருக்கிறோம். எங்காவது அதுபோன்று பெண்களைப் பற்றி கேள்விப்பட்டது உண்டா?

இப்படிப்பட்ட பொறுப்பும் கடமை உணர்வும் உடைய இந்திய பெண்களுக்கு சொத்தில் சம உரிமை தராத நிலையில், அதற்காக ஒரு சட்டம் வந்தால் நாம் மகிழ்ச்சி அடைய வேண்டாமா?

## சட்டத்தால் யாருக்கு பயன்?

இந்தச் சட்டத்தால் யாருக்கு பயன்? அனைத்து பெண்களுக்கும் பயன்; வரப்பிரசாதம் என்றே சொல்லலாம். யாருக்கு நட்டம் என்றால், பிற்போக்குவாதிகளுக்கும் மக்களின் இறை அச்சத்தை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் தனி நபர்களுக்கும்; எத்தனை கோடி பெண்கள் துன்பப்பட்டாலும் பரவாயில்லை, நாங்கள் ஆட்சிக்கு வர வேண்டும் என்று அரசியல் செய்பவர்களுக்கும்தான்.

அவர்களுக்கு ஒரு வேண்டுகோள். பெண்களை மட்டுமே உறுப்பினர்களாக உடைய ஒரு குழுவை அமையுங்கள். அக்குழுவிடம் உங்களது மதத்துக்கான சட்டங்களை வகுக்கும்படி கேட்டுக்கொள்ளுங்கள். அதன் முடிவு பொது சிவில் சட்டமாகத்தான் இருக்கும்.

## இப்பொழுது என்ன அவசியம்?

இப்பொழுது என்ன அவசியம் என்ற கேள்வியை மாற்றித் தான் கேட்டுப் பாருங்களேன். ஏன் தாமதிக்க வேண்டும்? 50 ஆண்டுகளாக ஆட்சி நடத்திய காங்கிரஸ், இதற்காக எந்த முயற்சியையும் எடுக்கவில்லை. அது இனி மேலும் முயற்சி எடுக்கும் என்பதில் நமக்கு நம்பிக்கை இல்லை.

வாக்குறுதி கொடுத்த பா.ஜ.க இதனை செய்ய முன் வந்தால் இப்பொழுது ஏன் செய்கிறீர்கள் என்று கேட்பது நியாயமா? எப்போது செய்ய வேண்டும் என்று யார் முடிவு செய்வது? பிரதமர் மோடி இந்தச் சட்டத்தை கொண்டு வருவதற்கான உண்மையான காரணம் அவர், பிறரின் நோய், தன் நோய் போல் காண்பதால் மட்டுமே என்பது என்னுடைய தனிப்பட்ட நம்பிக்கை.

நன்றி: இந்து தமிழ் திசை டிஜிட்டல்



## வாழ்வியல் தரிசனம்

ஒவ்வொருவருக்கும் நோய் வருவதும் அது பின்னர் குணமடைவதும் சாதாரணமானது. சிலநேரங்களில் கடுமையான நோய்களும் தாக்கிவிடுவதுண்டு. அப்பொழுது குடும்பத்தினர் வழிபாடுகளைச் செய்வார்கள். இதனால், நோய் குணமாகியவுடன் அது இறைவன் செயலாகும் என நிம்மதிப்பெருமூச்சு விடுவதுண்டு.

எனவே, மாறிமாறி வரும் துன்பங்களைக் கண்டு, அதீதமாகக் கவலைப்படல், தேகத்தை ஆரோக்கியமற்றதாக மாற்றிவிடும்.

கடவுள் மனிதர்களைத் தொடர்ந்தும் துன்பப்படுத்துவதில்லை. மக்கள் யாவரும் இயற்கையுடன் பயணிக்கின்றார்கள். அச்சம், சந்தேகம், கற்பனை என்பன பிறரது வதந்திகளால்த்தான் பெரும்பாலும் உருவாகின்றன.

நல்லதை நினைக்க வேண்டும். கவலைகளை கண்டபடி விலைக்கு வாங்கலாகாது. என்றும் சுகதேகியாக, சந்தோஷமாக, அமைதி நிலையில் வாழ்வோம் என நம்பிக்கை கொள்ளவும்.

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அச்சுறுத்தும் யானைகள்

அம்பாறை, அட்டாளைச்சேனை பிரதேச சபைக்குட்பட்ட அஸ்ரப் நகர், பள்ளக்காட்டுப் பிரதேசத்தில் கொட்டப்படும் குப்பைகளை தினந்தோறும் 100 க்கும் மேற்பட்ட யானைகள் உண்டு வருகின்றன.

சில வேளை அருகில் உள்ள பொதுமக்களின் உடைமைகளுக்கும் சேதம் விளைவிப்பதுடன் விவசாய நிலங்களையும் கபளீகரம் செய்கின்றன.

மேற்படி பகுதியில், தினமும் காரைதீவு, கல்முனை, அக்கரைப்பற்று, நிந்தவூர் உள்ளிட்ட பிரதேசங்களில் இருந்து குப்பைகள் கொண்டுவரப்பட்டு கொட்டப்படுகின்றன. மலைபோல் குவிந்துள்ள குப்பைகளை யானைகள் உண்ண வருகின்றன.

மேலும் கடந்த காலங்களில் இப்பகுதியில் பிளாஸ்டிக் குப்பைகளை உட்கொண்ட இரண்டு யானைகள் உயிரிழந்திருந்தன.

கடந்த எட்டு ஆண்டுகளில் 20 யானைகள் குப்பைகளிலுள்ள பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன் பொருட்களை சாப்பிட்டு இறந்துள்ளதுடன் கிழக்கு மாகாணத்தில் திறந்தவெளிகளில் பிளாஸ்டிக், பொலிதீன் கழிவுகள் தேங்குவதாலும் அதிகளவில் யானைகள் உயிரிழப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இறந்த யானைகளை பரிசோதித்த போது, பெருமளவிலான அழியாத பிளாஸ்டிக் பொருட்களை விழுங்கியுள்ளதாகவும் யானைகள் சாப்பிட்டு ஜீரணிக்கும் சாதாரண உணவு எதுவும் அங்கு தெளிவாகத் தெரியவில்லை என வனவிலங்கு கால்நடை மருத்துவர் தெரிவித்திருந்தார்.

பாறுக் ஷிஹான்





யாழ்ப்பாணத்தில் தகவல் தொழில்நுட்பத் தொழிலாளர்களுக்கு

# துறையில் வெற்றி பெறும் வழி

இலங்கையின் தகவல் தொழில்நுட்பத் துறையை வலுவூட்டும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட 2023 மாகாண தகவல் தொழில்நுட்ப மாநாடு யாழ்ப்பாணத்தில் இரண்டு நாள்களாக நடைபெற்றது.

இந்த மாநாட்டை இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிறுவனம் (ICTA), வட மாகாண தகவல் தொழில்நுட்ப வாரியம் (NCIT) மற்றும் USAID அமைப்பின் Catalyze Private Sector Development (PSD) செயற்பாட்டுத் திட்டம் ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்தன.

இங்கு, வடமாகாணத்தில் தகவல் தொழில்நுட்பத் துறையை மேலும் மேம்படுத்தும் நோக்கில் பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், உள்ளூர் மற்றும் சர்வதேச சந்தைகளை அணுகுவது மற்றும் சவால்களை சமாளிப்பது குறித்து நன்கு அறியப்பட்ட மற்றும் புகழ்பெற்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள், தொழில் வல்லுநர்கள் மற்றும் அறிஞர்களால் அந்த தொழிலதிபர்களுக்கு விளக்கப்பட்டது.

டிஜிட்டல் ஊடக நிர்வாகம், UI/UX, தயாரிப்பு பொறியியல், கொள்முதல் செயல்முறை, தகவல் தொழில்நுட்ப விலை நிர்ணயம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான புதிய கட்டளைகள், விதிகள், ஒப்பந்தங்கள் போன்ற பகுதிகள் குறித்தும் இங்கு விழிப்புணர்வு அளிக்கப்பட்டது.

சர்வதேச மட்டத்தில் இலங்கையில் பணிபுரியும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் மற்றும் வெளிநாடுகளில் தகவல் தொழில்நுட்பத் துறையில் பணிபுரியும் இலங்கையர்களின் அனுபவங்கள், தொழில்முறை திறன்கள் மற்றும் அறிவைப் பரிமாறிக்கொள்ளவும் இங்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பட்டதாரிகள் உட்பட இளைஞர் சமூகத்தினருக்கான தகவல் தொழில்நுட்ப தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சியும் இங்கு இடம்பெற்றதுடன் அதில் அவர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

> **“யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டின் வெற்றியின் அடிப்படையில் அடுத்த மாகாண தகவல் தொழில்நுட்ப மாநாடு ஒகஸ்ட் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் காலியில் நடைபெறவுள்ளதுடன் மேலதிக தகவல்களை charithk@icta.lk என்ற மின்னஞ்சல் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்**

இலங்கை மத்திய வங்கி மற்றும் தனியார் துறை வங்கிகளின் அதிகாரிகளால், தகவல் தொழில்நுட்பத் துறையினர் வங்கித் துறையால் தமது தொழில்துறைக்குக் கிடைக்கும் நன்மைகள், நிதிப் பாதுகாப்பை எவ்வாறு அடைவது மற்றும் வருமானத்தை எவ்வாறு விரிவுபடுத்துவது போன்ற விடயங்கள் தொடர்பில் விசேட கலந்துரையாடலும் இங்கு இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டின் வெற்றியின் அடிப்படையில் அடுத்த மாகாண தகவல் தொழில்நுட்ப மாநாடு ஒகஸ்ட் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் காலியில் நடைபெறவுள்ளதுடன் மேலதிக தகவல்களை charithk@icta.lk என்ற மின்னஞ்சல் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.



# ஆண்ட்ரியாவின் கூச்சம்



முப்பத்தாறு வயதாகி உள்ள நிலையிலும் திருமணம் செய்யாமல் நடிகை ஆண்ட்ரியா படத்தில் ‘பிசி’யாக உள்ளார்.

சினிமா பின்னணி பாடகியாக இருந்து பச்சைக்கிளி முத்துச்சரம் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் ஆண்ட்ரியா.

இதைத்தொடர்ந்து மங்காத்தா, விஸ்வரூபம், தரமணி, வடசென்னை ஆயிரத்தில் ஒருவன் உள்பட பல படங்களில் நடித்தார்.


தெலுங்கில் இருந்து தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்ட ‘புஷ்பா’ படத்தில் “ஊ சொல்றியா மாமா ஊ ஊ சொல்றியா மாமா” என்ற பாடலை பாடியிருந்தார்.

இந்நிலையில் வெற்றிமாறன் இயக்கத்தில் ‘அனல்மேல் பனித்துள்ளி’ என்ற படத்தில் ஆண்ட்ரியா நடித்து வருகின்றார்.

இது குறித்து கூறுகையில், ““அனல்மேல் பனித்துளி’ படத்தில் ஒரு காட்சியில் நடித்த போது கூச்சமாக இருந்தது. இது புதுமையாகவும் இருந்தது. இந்தக் காட்சிகளைவிட என் நிஜ வாழ்க்கையில் இதை விட பல சம்பவங்கள் நடந்துள்ளன” என்றார்.

ஆண்ட்ரியா இந்தப் படத்தில் அரை நிர்வாணமாக நடித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

# தொடர் விடுமுறையை குறி வைத்த ‘இறைவன்’



ஜெயம் ரவி, நயன்தாரா நடித்த ’இறைவன்’ திரைப்படத்தை செப்டம்பர் மாதம் இறுதி வாரத்தில் வெளியிட படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

‘என்றென்றும் புன்னகை’ பட இயக்குனர் அகமது இயக்கத்தில் ஜெயம் ரவி, நயன்தாரா நடித்துள்ள திரைப்படம் ’இறைவன்’.

இந்தத் திரைப்படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து இறுதி கட்ட தொழில்நுட்ப பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

அண்மையில், இந்த படத்தின் பின்னணி இசையமைப்பு பணியை யுவன் சங்கர் ராஜா ஆரம்பித்ததாக அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், வரும் செப்டம்பர் இறுதி வாரத்தில் நபிகள் தினம் வருவதால், தொடர்ச்சியாக மூன்று நாட்கள் விடுமுறை தினத்தை பயன்படுத்திக்கொள்ள ’இறைவன்’ படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

செப்டம்பர் இறுதி வாரத்தில் 250 கோடி ரூபாய் பட்ஜெட்டில் தயாரிக்கப்பட்ட பிரபாஸ் நடித்த ’சலார்’



திரைப்படம் வெளியாக இருக்கும் நிலையில் அந்த படத்துடன் ’இறைவன்’ படம் மோதவுள்ளது.

இந்த படம் ரிலீஸ் திகதி விரைவில் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட உள்ளது.




# பாரதிராஜா நடித்துள்ள ‘கருமேகங்கள் கலைகின்றன’

இயக்குனர் தங்கர் பச்சான் இயக்கத்தில் உருவாகியுள்ள படம் ‘கருமேகங்கள் கலைகின்றன’.

இப்படத்தில் இயக்குனர் பாரதிராஜா, யோகி பாபு, கௌதம் மேனன், எஸ்.ஏ.சந்திரசேகர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

ஜி.வி பிரகாஷ் குமார் இசையமைக்கும் இப்படத்திற்கு கவிஞர் வைரமுத்து பாடல் வரிகள் எழுதியுள்ளார்.

இந்நிலையில், கருமேகங்கள் கலைகின்றன படம் வருகிற செப்டம்பர் 1ஆம் திகதி திரையரங்குகளில் வெளியாகவுள்ளது.

இதனை படக்குழு போஸ்டர் ஒன்றை பகிர்ந்து அறிவித்துள்ளனர்.

# விஜய் ஜோடியாக ஜோதிகா?





வெங்கட் பிரபு இயக்கத்தில் யுவன் ஷங்கர் ராஜா இசையில் ‘தளபதி 68’ உருவாக உள்ளது. அத்துடன், லியோ படப்பிடிப்பினை முடித்த நடிகர் விஜய் நோர்வே சென்று தற்போது சென்னை திரும்பியுள்ளார்.

இந்த நிலையில், தமிழில் பூவெல்லாம் கேட்டுப்பார் படத்தில் அறிமுகமான நடிகை ஜோதிகா நடிப்பில், கடைசியாக 2021ஆம் ஆண்டு சசிகுமாரின் ‘உடன்பிறப்பு’ படம் வெளியானது. தற்போது, ‘காதல்’ எனப் பெயரிடப்பட்டுள்ள படத்தில் பிரபல மலையாள நடிகர் மம்மூட்டியுடன் ஜோதிகா இணைந்து நடித்து வருகிறார்.


இந்த நிலையில், நடிகர் விஜய்யுடன் இணைந்து ‘தளபதி 68’ படத்தில் ஜோதிகா நடிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அக்டோபர்-நவம்பர் மாதங்களில் நடிக்க ஜோதிகாவிடம் கால்சீட் கேட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

2000இல் குஷி, 2003இல் திருமலை ஆகிய வெற்றிப் படங்களில் நடிகர் விஜய்யுடன் இணைந்து நடித்துள்ளார். 20 வருடங்களுக்குப் பிறகு ஜோதிகா-விஜய் இணைவார்களா என ரசிகர்கள் மிகுந்த ஆர்வத்தில் உள்ளனர்.

# அனிருத்தால் தாமதம்





சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் நடித்த ’ஜெயிலர்’திரைப்படம் வெளியாகி வரவேற்பு பெற்று வருகின்றது.

முன்னதாக, படத்தின் இசை வெளியீட்டு விழாவில் ரஜினி பேசிய போது ’நெல்சன் கதை சொல்ல வீட்டுக்கு வரும்போது லேட்டாக வந்தார்’ என்று நகைச்சுவையாக கூறியிருந்தார்.

இந்த நிலையில் ’ஜெயிலர்’ படத்தின் வெற்றிக்கு பிறகு ஊடகங்களில் பேட்டி அளித்து வரும் நெல்சன் ’ரஜினிக்கு கதை சொல்ல தாமதமாக போனதற்கு என்ன காரணம் என்பதை விளக்கியுள்ளார்.

ரஜினிக்கு கதை சொல்ல செல்வதற்கு முந்தைய நாள் இரவு அனிருத் ஸ்டுடியோவில் அதிகாலை 4 மணி வரை இருந்ததாகவும் அதனால் தான் தன்னால் சரியான நேரத்திற்கு போக முடியவில்லை என்றும் கூறியுள்ளார்.

ஆக மொத்தத்தில் ரஜினிக்கு கதை சொல்ல தாமதமாக நெல்சன் போனதற்கு காரணம் அனிருத் தான் என்று அவர் கூறியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிலவை நெருங்கும் சந்திரயான்-3




சந்திரயான்-3 விண்கலம் திட்டமிட்டபடி, முதற்கட்ட சுற்றுப்பாதை தூரத்தை குறைக்கும் பணிகள் மூன்று முறை வெற்றிகரமாக நடைபெற்ற நிலையில், நான்காம் கட்ட, இறுதி கட்ட சுற்றுப்பாதையின் குறைப்பு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தியா உட்பட உலகமே எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த சந்திரயான்-3 விண்கலம், ஜூலை 14ஆம் திகதி நிலவில் ஆய்வு மேற்கொள்வதற்காக, ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்.வி.எம்3 எம்4 (LVM3 M4) ரொக்கெட் மூலம் விண்ணில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது.

சந்திராயன்-3 விண்கலமானது பூமியை சுற்றி தனது சுற்றுப்பாதையை நிறைவு செய்து, நிலவை நோக்கிய தனது பயணத்தைத் தொடர ஆரம்பித்த நிலையில், நிலவின் டிரான்ஸ்லூனார் சுற்றுப்பாதையில் செலுத்தபட்டது.

மேலும் ப்ராபல்ஷன் பகுதியில் இருந்து லேண்டர் பகுதியானது வியாழக்கிழமை (17) அன்று பிரிக்கப்படும் என இஸ்ரோ தகவல் வெளியிட்டுள்ளது.




மகாராஷ்டிரா

# உணவகமாக மாறிய பழைய ரயில் பெட்டிகள்

மகாராஷ்டிராவின் நாசிக்கில் பழைய ரயில் பெட்டிகளை நட்சத்திர உணவகமாக மாற்றி, அசத்தி உள்ளனர் ரயில்வே அதிகாரிகள். ரயில்வேயின் வருவாயை அதிகரிக்கவும் வேலை வாய்ப்புகளை உருவாக்கும் நோக்கத்துடனும், இந்தப் புதிய முயற்சி மேற்கொண்டுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர்.

நட்சத்திர உணவகங்கள் தோற்றுப்போகும் அளவிற்கு ஆச்சரியப்படுத்தும் வகையில் கண்கவர் வண்ணங்களில் உருமாற்றம் அடைந்துள்ள இந்த ரயில் பெட்டிகள், சுற்றுலாப் பயணிகளை அதிகம் கவர்ந்துள்ளன.

ரயில் நிலையத்திற்கு உள்ளேயே ரயில் பெட்டிகளில் ரம்மியமான சூழலில் இது போல் உணவருந்துவது வித்தியாசமான அனுபவம் என்று கூறுகிறார் வாடிக்கையாளர் ஒருவர். "சக்கரங்களுடன் கூடிய உணவகங்களின் அரண்மனை" என்றும் பலர் வர்ணித்து வருகின்றனர்.

2002 ஆம் ஆண்டு இதேபோன்று ஆந்திர பிரதேசத்தின் குண்டூர் ரயில் நிலையத்தில் செயற்படாத ரயில் பெட்டிகள் உணவகமாக மாற்றப்பட்டன. அந்த ரயில் பெட்டி உணவகம், பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு 24 மணிநேரமும் சிறப்பான சேவையை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

# ராஜநாகத்தை முத்தமிட்ட வன ஆர்வலர்



பாம்புகள் குறித்த வீடியோக்களை ரசிப்பதற்கு என்று சமூக வலைதளங்களில் தனி ரசிகர் பட்டாளம் உள்ளது. ஆனால் பகிரப்படும் வீடியோக்களில் சில அதிர்ச்சியளிக்கும் வகையில் இருக்கும்.

இந்நிலையில் தற்போது இணையத்தில் வைரலாகி வரும் ஒரு வீடியோவில் மைக்ஹோல்ஸ்டன் என்ற வன ஆர்வலர், கொடிய விஷம் கொண்ட ராஜநாகத்தின் தலையில் முத்தமிடும் வீடியோவை பகிர்ந்துள்ளார்.

பெங்களூர்

# முதியவரை மிரட்டி ரூ.82 இலட்சம் மோசடி

பெங்களூரில் வசிக்கும் ஓய்வு பெற்ற அரசு ஊழியர் ஒருவருக்கு, அன்னம்மா என்ற பெண் அறிமுகமாகி உள்ளார். அன்னம்மாவுக்கு 40 வயதாகிறது. தனக்கு ஒரு மகன் இருப்பதாகவும், அவன் புற்றுநோயால் அவதிப்பட்டு வருவதாகவும் கூறி, அரசு ஊழியரிடம் கண்ணீர் சிந்தியுள்ளார். பிறகு 5,000 ரூபாய் உதவி வேண்டும் என்றும் கேட்டுள்ளார். மனமிரங்கிய அந்த அரசு ஊழியரும் அந்த பெண்ணுக்கு 5,000 ரூபாய் பணம் கொடுத்துள்ளார்.

இதனிடையே, சினேகா என்ற தன்னுடைய தோழியை, அரசு ஊழியருக்கு அன்னம்மா அறிமுகப்படுத்தியுள்ளார். இதற்கு பிறகு, கடந்த ஜூன் மாதம், அன்னம்மாவிடம் இருந்து அரசு ஊழியரின் ஆபாச வீடியோ, போட்டோக்களை சினேகா பெற்றுக் கொண்டுள்ளார். பிறகு, அரசு ஊழியரை பணம் கேட்டு மிரட்டத் தொடங்கி உள்ளார். "பணம் கொடுக்காவிட்டால், உங்க வீட்டுக்கு இந்த ஆபாச வீடியோவை அனுப்பிவிடுவேன்" என்றும் மிரட்டியுள்ளார். இதனால் அவமானத்திற்குப் பயந்துபோன முதியவர், சினேகா சொன்னதுபோலவே, 2 வெவ்வேறு வங்கிக் கணக்குகளுக்கு 82 இலட்ச ரூபாயை அனுப்பி வைத்திருக்கிறார்.





ஆப்கானிஸ்தான்

# இரண்டாம் ஆண்டு நிறைவை கொண்டாடும் தலிபான்கள்

ஆப்கானிஸ்தானில் இருந்து 2021ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகள் வெளியேறின. அதன் பின்னர் தலிபான்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றினர். இஸ்லாமியர்களின் ஷரியத் சட்டத்தின்படியே ஆட்சி நடைபெறும் என்று அவர்கள் அறிவித்தனர்.

அதேவேளையில், கடந்த முறையைப் போல் ஆட்சி இருக்காது; பெண் கல்வி, பெண் சுதந்திரம் பேணப்படும்; உலக நாடுகளுடன் நட்புறவு ஏற்படுத்தப்படும் என்று தலிபான்கள் உறுதியளித்தனர். ஆனால், அவர்கள் கூறியபடி ஆட்சி நடைபெறவில்லை.

**“ செவ்வாய்கிழமை (15) தேசிய விடுமுறையாக அறிவித்தனர். காபூல் வீதிகளில் ஊர்வலமாகச் சென்ற தலிபான்கள், கைவிடப்பட்ட அமெரிக்க தூதரக கட்டடத்திற்கு அருகிலுள்ள மசூத் சதுக்கத்தில் ஒன்று கூடினார்கள். சிலர் தங்கள் ஆயுதங்களை ஏந்திச் சென்றனர். மற்றவர்கள் கீதங்கள் முழங்க, இளம் சிறுவர்கள் இஸ்லாமிய நம்பிக்கைப் பிரகடனம் பொறிக்கப்பட்ட இயக்கத்தின் வெள்ளைக் கொடியை ஏந்தி சென்றனர்.**

இந்நிலையில் தலிபான்கள் மீண்டும் ஆட்சியைப் பிடித்து இரண்டு ஆண்டுகள் நிறைவு பெற்றதை ஒட்டி அவர்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

தலிபான்கள் செவ்வாய்கிழமை (15) தேசிய விடுமுறையாக அறிவித்தனர். காபூல் வீதிகளில் ஊர்வலமாகச் சென்ற தலிபான்கள், கைவிடப்பட்ட அமெரிக்க தூதரக கட்டடத்திற்கு அருகிலுள்ள மசூத் சதுக்கத்தில் ஒன்று கூடினார்கள். சிலர் தங்கள் ஆயுதங்களை ஏந்திச் சென்றனர். மற்றவர்கள் கீதங்கள் முழங்க, இளம் சிறுவர்கள் இஸ்லாமிய நம்பிக்கைப் பிரகடனம் பொறிக்கப்பட்ட இயக்கத்தின் வெள்ளைக் கொடியை ஏந்தி சென்றனர்.

## எல்.பி.எல்:

# தகுதிகாண் போட்டியில் கோல் டைட்டான்ஸ்

இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான லங்கா பிறீமியர் லீக் தொடரின் தகுதிகாண் போட்டிகளுக்கு கோல் டைட்டான்ஸ் தகுதி பெற்றுள்ளது.

கொழும்பு ஆர் பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கொழும்பு ஸ்ரைக்கர்ஸுடனான போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே டைட்டான்ஸ் தகுதிகாண் போட்டிகளுக்கு தகுதி பெற ஸ்ரைக்கர்ஸ் தொடரிலிருந்து வெளியேறியது.

ஸ்கோர் விவரம்:


நாணயச் சுழற்சி: டைட்டான்ஸ்

ஸ்ரைக்கர்ஸ்: 74/10 (15.4 ஓவ. )
(துடுப்பாட்டம்: தப்ரையாஸ் ஷம்சி 4/20 [4], சீக்குகே பிரசன்னா 3/14 [3], லஹிரு குமார 2/9 [2], ஷகிப் அல் ஹஸன் 1/8 [3.4], கசுன் ராஜித 0/10 [2])

டைட்டான்ஸ்: 75/2 (8.3 ஓவ. )
(துடுப்பாட்டம்: லசித் குறொஸ்புள்ளே ஆ.இ 42 (25) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஜெஃப்ரி வன்டர்சே 1/18 [3])

போட்டியின் நாயகன்: தப்ரையாஸ் ஷம்சி

இந்நிலையில், இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ள முதலாவது தகுதிகாண் போட்டியில் தம்புள்ள ஓறாவை டைட்டான்ஸ் எதிர்கொள்ளவுள்ளதுடன், இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள வெளியேற்றப் போட்டியில் பி-லவ் கண்டியும், நடப்புச் சம்பியன்களான ஜஃப்னா கிங்ஸும் மோதவுள்ளன.





## பூப்பந்தாட்டத்தில்

# தேசிய மட்டத்தில் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி

எம்.என்.எம். அப்ராஸ்

கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான பூப்பந்தாட்டத் தொடரில் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரி மாணவர்கள் 18 வயதுப் பிரிவில் விளையாடி மாகாண சம்பியனாக மீண்டும் ஒரு தடவை நிருபித்து தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.




## நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், யுனிசெப்பால்

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரிக்கு விளையாட்டு உபகரணங்கள்

அஸ்ஹர் இப்றாஹிம்

சிறுவர்களின் உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கிலும் சிறுவர்களை வலுவூட்டும் வகையிலும் நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களம், யுனிசெப் அனுசரணையில் கல்முனை வலய கல்வி அலுவலகத்துக்கு உட்பட்ட ஐந்து பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கும் நிகழ்வானது கல்முனை பிரதேச செயலாளர் ஜே. லியாக்கத் அலி தலைமையில் சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர் ஏ.கே காமிலா ஏற்பாட்டில் பிரதேச செயலக கூட்டம் மண்டபத்தில் நடைபெற்ற பிரதேச மட்ட சிறுவர் பெண்கள் அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரிக்கு (தேசிய பாடசாலை) பூப்பந்தாட்ட விளையாட்டு உபகரணங்கள் வழங்குவதுடன் நடைபெற்றது.

மேலும் மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரி, அல்-மனார் மத்தியகல்லூரி, நற்பிட்டி முனை லாபீர் வித்தியாலயம், கல்முனை அல்-மிஸ்பா மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகளுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.



## மூன்றாண்டுகளின் பின்

# கிழக்கு மாகாணத்தில் முதற்றடவையாக சர்வதேச நீச்சல் பயிற்சி

வ. சக்தி

கிழக்கு மாகாணத்தில் இளைஞர்களுக்கு சர்வதேச நீச்சல் பயிற்றுநரால் நீச்சல் பயிற்சி மட்டக்களப்பு வெபர் நீச்சல் தடாகத்தில் வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.வை. ஆதம்லெப்பையின் ஏற்பாட்டில் அண்மையில் இந்நிகழ்வு நடைபெற்றது. விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் சோல்வ் பவுண்டேசன் அனுசரணையில் நடைபெற்ற இப்பயிற்சிப் பாசறையின் பிரதான பயிற்றுநராக அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த சிட்னி ஒலிம்பிக் பார்க் மைதானத்தின் பயிற்றுநர் பஞ்சரத்தினம் தம்பு இதன்போது கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார்.

கிழக்கு மாகாணத்தில் தெரிவு செய்யப்பட்ட நீச்சல் பயிற்றுவிப்பாளர்கள், உயிர்க்காப்பு நீச்சல் கற்கை நெறியை நிறைவு செய்தவர்கள், நீச்சல் வீரர்கள் போன்றோருக்கு நீச்சல் தொழில்நுட்பங்கள், பயிற்சிகள் தொடர்பாக இதன் போது வளவாளரால் பயிற்றுவிக்கப்பட்டன. பயிற்சியில் கலந்து கொண்ட நீச்சல் வீரர்களுக்கு பெறுமதியான சான்றிதழ்கள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.

சிறந்த நீச்சல் வீரர்களை உருவாக்குவதற்கு இப்பயிற்சிகள் உதவுவதுடன் எதிர் காலத்திலும் இவ்வாறான பயிற்சிகள் இடம்பெறவுள்ளதான விளையாட்டு உத்தியோகத்தர்கள் இதன்போது தெரிவித்தனர்.

## யங் பிளவர் இருபதுக்கு – 20 சம்பியன்ஸ் கிண்ணத் தொடர்:

# விவேகானந்தாவை வென்ற காரைதீவு

வி.ரி. சகாதேவராஜா

அக்கரைப்பற்று யங் பிளவர் இருபதுக்கு - 20 சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில், அக்கரைப்பற்று பொது விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற விவேகானந்தா விளையாட்டுக் கழகத்துடனான தொடரின் ஏழாவது போட்டியில் காரைதீவு விளையாட்டுக் கழகம் வென்றது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை, 17 ஓகஸ்ட் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.